**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **62**

| | | | |
|---|---|---|---|
| Name: | குமரேஸ் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A11, A20 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 03.07.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி எல்.ஆர்.எஸ்பாளையத்தில், மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். தென்காசி கன்னிமாரம்மன் கோவில் தெரு, கூலக்கடை பஜார் சந்திப்பில் விஜய் எலக்ட்ரானிக் என்ற பெயரில் டி.வி.ரிப்பேர் கடை நடத்தி வருகிறேன். நான் வழக்கமாக காலை 9.00 மணிக்கு கடை திறந்து இரவு 8.00 மணிக்கு கடையை மூடுவேன். நான் வழக்கம்போல் கடையை திறந்து வேலை பார்த்து கொண்டிருந்தேன். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை 10.15 மணிக்கு கடையை திறந்து நான் கடையில் இருநதபோது என் கடைக்கு வடக்கே ஒரு சத்தமாக கேட்டது. நான் வெளியில் வந்துபார்த்தபோது பிரச்சனை என்று சொன்னார்கள். நானும் கடையை அடைத்து சென்றுவிட்டேன். இந்து மூஸ்லீம் பிரச்சனை என்று கூறினார்கள். இரண்டுதரப்பிலும் சுமார் 4 அல்லது 5 நபர்கள் இறந்ததாக கேள்விப்பட்டேன். என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**:-

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் அவ்வாறு அவர்கள் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி அன்று காலை 10.15 மணிக்கு நான் கடையில் வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தபோது எனது கடைக்கு வடக்கே ஒரு சத்தமாக கேட்டது என்றும் நான் வெளியே வந்து பார்த்தபோது இரண்டுபார்ட்டிகள் ஒருவருக்கொருவர் அரிவாள், கத்தி, இரும்பு கம்வி போன்ற பொருள்களால் தாக்கி கொண்டிருந்தார்கள் என்றும் அதில் சிலர் வெட்டுக்காயங்களுடன் ஓடினார்கள் என்றும் அந்த வழியாக வந்தவர்கள் பயத்தில் தெற்கு பார்த்து ஓடினார்கள் என்றும் எல்லாக கடைகாரர்களும் கடையை அடைத்துவிட்டு சென்றார்கள் என்றும் அதனால் நானும் கடையை மூடிவிட்டு சென்றுவிட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நெடுநாட்களாக அதே பகுதியில் கடை நடத்தி வருவதால் எதிரிகளை மற்றும் காயம் பட்டவர்களை தெரியும் என்றும் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**